# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.107/2025** |
| Deposition of witness | : | P.W.4 |
| Name | : | திரு.கணேசன் |
| Father's /Husband Name | : | கோவிந்தசாமி |
| Village | : | குடவாசல் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 58 |
| Occupation | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 24th day of March 2026.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.11.2024 ம் தேதி மாலை 15.00 மணியளவில் நிலைய பொறுப்பில் இருந்த போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வரப்பட்ட தகவலைப் பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த துரைராஜன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து குடவாசல் காவல் நிலைய குற்ற எண்.449/2024 BNS பிரிவுகள் 296(பி), 118(2), 351(2) என் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு நான் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 18.11.2024 ம் தேதி சுமார் 04.00 மணிக்கு இவ்வழக்கின் சம்பவயிடத்திற்கு சென்றேன். அங்கிருந்த சாட்சிகளான பாலகிருஷ்ணன், விநாயகம் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு பின்பு சாட்சிகள் மைதிலி, சரோஜா, பாலகிருஷணன் மற்றும் விநாயகம் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.மேலும், இவ்வழக்கில் காயமுற்ற அ.சா.1 க்கு சிகிச்சை

அளித்த மருத்துவர்கள் சிவராமன் மற்றும் முகம்மது அலாவுதீன்  என்பவரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்று வந்தேன். **அந்த பதிவேடு மற்றும் காயச் சான்று அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியான மோகன்  என்பவரை 19.11.2024 ம் தேதி மாலை 05.30 மணியளவில் இவ்வழக்கின் குற்றம் காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து உரிய நடைமுறைக்கு பின்பு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் இத்துடன் விசாரணை முடித்து எதிரி மீது குற்ற அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

அ.சா.1 கொடுத்த தவறான புகாரினை சரிவர புலன் விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கின் சம்பவ இடத்தை நேரில் பார்வையிடாமல் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் எதிரிகளை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. புள்ளி விபர கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்து அதற்கேற்ப ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.  வழக்கிற்கும், ஆஜர் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. வழக்கினை சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.24 13:52:51 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.